(2) ஒழுங்குப் பிரச்சினைகள் (தொடர்ச்சி)

(ஆ) அவைக்குக் கொடுக்கும் விவரம் குறித்து.

திரு. மு. கருணாநிதி: தலைவர் அவர்களே, ஒரு ஒழுங்குப் பிரச்னையை இந்த அவையில் உங்கள் அனுமதியோடு எழுப்பிட விரும்புகிறேன். நேற்றையதினம் வருவாய்த் துறை மானியத்தையும் அதையொட்டிய பல கோரிக்கைகளின் மீது விவாதம் நடந்த போது எதிர்க் கட்சியைச் சார்ந்த மாண்புமிகு உறுப்பினர் திரு. சாதிக் பாட்சா அவர்கள் நிதி அமைச்சர் அவர்களிடத்தில் ஒரு விளக்கத்தைக் கேட்டார்கள். அந்த விளக்கம், நிதிநிலை அறிக்கையில் ஆண்டு ஒன்றுக்கு ஒரு லட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டுமொத்த கணிப்பு முறை கொண்டுவரப்படும் என்று நிதிநிலை அறிக்கையில் இருக்கிறது. இந்த ஒட்டுமொத்த கணிப்பு முறை என்பது ஏறத்தாழ கம்பவுண்டிங் ஸிஸ்டம். இந்த முறை அமல்படுத்தப்படுமானால் ஏற்கனவே கழக அரசால் சிறு வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்ட சலுகை 50,000 ரூபாய் வரையில் அவர்கள் வரி கட்டத் தேவை இல்லை. டேர்ன் ஓவர் ரூபாய் 50,000 வரை இருந்தால் அவர்கள் வரி கட்டத் தேவையில்லை என்ற சலுகை இதன் மூலமாக அடிபட்டுப் போகிறதா என்று திரு. சாதிக் பாட்சா அவர்கள் கேட்டார்கள். அப்போது நிதி அமைச்சர் அவர்கள் லட்சம் ரூபாய் இல்லை, ரூ. 50,000 தான். சந்தேகம் எழத் தேவை இல்லை என்று குறிப்பிட்டார்கள். ஆனால் நிதி நிலை அறிக்கையில், 36-வது பக்கத்தில், "... ஆண்டிற்கு ஒரு இலட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டு வரப்படும்" என்றிருக்கிறது.

எனவே இது ஒரு பெரிய முரண்பாடு. ஒழுங்குப் பிரச்னைக்குரியது. இதில் எதைச் சரி என்று இந்த அரசு ஏற்றுக்கொள்கிறது என்று எனக்குப் புரியவில்லை. அமைச்சரவை இதில் எது சரி என்று கூறுகிறது என்பதைத் தெரிந்து கொள்ள விரும்புகிறேன். அதை விளக்கவேண்டுமென்றும் கேட்டுக்கொள்கிறேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன்: தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் ஒரு ஒழுங்குப் பிரச்னையை எழுப்பியுள்ளார்கள். ரூ. 50,000 வரையில் டேர்ன் ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற விதிவிலக்கு அப்படியே தொடருகிறது. ரூ. 50,000-ல் இருந்து ஒரு லட்சம்

ரூபாய் வரையில் டேர்ன் ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு விதிக்கப் படுகிற வரி—ஒட்டு மொத்தக் கணிப்பு—கம்பௌண்டிங் ஸிஸ்டத்தில் கொண்டுவரப்பட்டிருக்கிறது.

திரு. மு. கருணாநிதி : அப்படியானால் நிதி நிலை அறிக்கையில் அது என் தெளிவாகக் குறிப்பிடப்படவில்லை? நிதி நிலை அறிக்கை யில் மிகத் தெளிவாக ஆண்டிற்கு ஒரு இலட்சத்திற்குக் குறைவாக விற்பனை உடைய சிறு வணிகர்களுக்கு ஒட்டுமொத்தக் கணிப்பு முறை கொண்டுவரப்படும் என்று கூறப்பட்டிருக்கிறது. லட்சத் திற்குக் குறைவாக விற்பனை உடைய வணிகர்கள் என்றால், ரூ. 10,000 வியாபாரம் செய்கிறவர்களும் அதில் அடங்குவார்கள். ஆகவே நிதி நிலை அறிக்கையில் உள்ளதற்கும் நிதி அமைச்சர் அவர்கள் சொன்னதற்கும் இடையே முரண்பாடு இருக்கிறது என் பதைத் தான் சுட்டிக்காட்டினேன்.

மாண்புமிகு திரு. ச. இராமச்சந்திரன் : ரூ. 50,000 வரையில் டேர்ன் ஓவர் உள்ள சிறு வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற வரி விலக்கு ஏற்கனவே அமலில் உள்ள ஒன்று. மாண்புமிகு எதிர்க் கட்சித் தலைவர் அவர்கள் முதல் அமைச்சராக இருந்த போதே அளிக்கப்பட்டிருக்கிற விலக்கு அது. ஆகவே அது தொடருகிறது. இந்த அரசு புதிதாக அளித்திருக்கிற சலுகை என்ற வகையில் ஒரு லட்சம் ரூபாய் வரையில் வியாபாரம் செய் கிறவர்களுக்கு கம்பௌண்டிங் ஸிஸ்டம் என்று சொல்லப்படு கிறது. அதன் மூலம் ரூ. 50,000 வரையில் உள்ள டேர்ன் ஓவர் உள்ள வியாபாரிகளுக்கு அளிக்கப்பட்டிருக்கிற விலக்கு தொடரு கிறது என்றுதான் பொருள். வரி விலக்கு ரூ. 50,000 வரை டேர்ன் ஓவர் உள்ளவர்களுக்கு, ரூ. 50,000 வரை உள்ளவர்களுக்கு வரி விதிப்பு கிடையாது. ரூ. 50,000-ல் இருந்து ஒரு லட்சம் ரூபாய் வரை டேர்ன் ஓவர் உள்ளவர்களுக்கு கம்பௌண்டிங் ஸிஸ்டம்.

(முற்பகல் 10-00)

(6) 1977-78 ஆம் ஆண்டுக்கான மானியக் கோரிக்கைகள் மீது விவாதமும் வாக்கெடுப்பும் (தொடர்ச்சி).

கோரிக்கை எண்—17—கல்வி.

மாண்புமிகு திரு. செ. அரங்கநாயகம் : தலைவர் அவர்களே, ஆளுநர் அவர்களின் பரிந்துரையின் மேல், கீழ்க்கண்ட தீர்மானத்தை முன்மொழிகிறேன்.